Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only

# All Saints Day




To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

TO SERVE THE LORD AND HIS PEOPLE

# Bulletin

## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




## கூதோஸ் ஈத்தோ ஞாயிறு

(சபையின் புனிதமாக்கம்)

## திருவழிபாட்டு ஆண்டு தொடக்கம்

மலர் 20 நவம்பர் 2023 இதழ் 11

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.11.2023 | Wednesday | 7.00 am | Memorial<br>Class<br>Prize Distribution of Kalivizha | Kirathoor<br>Major Seminary<br>MJKM |
| 03.11.2023 | Friday | <br>2.30 pm | Class<br>School Day | Major Seminary<br>Sooriacode |
| 04.11.2023 | Saturday | | Class | Major Seminary |
| 05.11.2023 | Sunday | | Holy Mass<br>Catechism Day | Oorambuvilai<br>CSI - Viricode |
| 07.11.2023 | Tuesday | | Monthly Recollection | Bishop's House |
| 10.11.2023 | Friday | | Class For Lay Theologians | Trivandrum |
| 11-12.11.2023 | Saturday - Sunday | | Youth Convention | Bhopal |
| 14.11.2023 | Tuesday | | School Day | Chellamkonam |
| 16.11.2023 | Thursday | 10.00 am | Marriage | Sooriacode |
| 17.11.2023 | Friday | | Class | Major Seminary |
| 18.11.2023 | Saturday | | Class | Major Seminary |
| 19.11.2023 | Sunday | <br>2.00 pm<br><br>3.45 pm | Holy Mass<br>Communication Day Celebration<br>Inter District – Christ the King Procession | Nadikkavu<br>Bishop's House<br><br>Puspagiri |
| 20.11.2023 | Monday | | Class<br>Class For Deacons | Major Seminary<br>Catholicate Centre |
| 21.11.2023 | Tuesday | <br>2.00 pm | Class<br>School Day | Major Seminary<br>Kirathoor |
| 22.11.2023 | Wednesday | <br>6.00 pm | Class<br>Feast Mass | Major Seminary<br>DM Convent Mtm |
| 23.11.2023 | Thursday | 10.30 am | House Warming | Sooriacode |
| 24.11.2023 | Friday | | TNBC – Labour Commisssion | Trichy |
| 25.11.2023 | Saturday | | Youth Convention | Bombay |
| 26.11.2023 | Sunday | 8.00 am<br>4.00 pm | Holy Mass<br>Episcopel Consecration | Marthandam<br>Sivagangai |
| 29.11.2023 | Wednesday | | House Warming | Vimalapuram |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 நவம்பர் 2023 இதழ். 11

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*



# உலக தகவல் தொடர்பு தினத்துக்கான திருத்தந்தையின் செய்தி

“அன்பின் அடிப்படையில் இதயத்திலிருந்து உண்மையைப் பேசுதல்” (எபே. 4:15)

**அன்புக்குரிய சகோதரர்களே, சகோதரிகளே!**

கடந்த ஆண்டுகளில் உலகத் தொடர்பு நாளுக்கான செய்திகளில், மக்களிடையே தொடர் பாடலுக்கான அடிப்படைகளாக ‘சென்று பார்’, ‘செவிமடு’ என்ற கருத்துகளைச் சிந்தித்தோம்.



இந்த ஆண்டு 57-வது உலகத் தொடர்பு நாளில் ‘இதயத்திலிருந்து உண்மையைப் பேசுதல்’ என்பதைப் பற்றிச் சிந்திக்க விரும்புகிறேன். சென்று பார்க்கவும், செவிமடுக்கவும் நம்மைத் தூண்டுவது நமது இதயமே. திறந்த மனத்துடன் வரவேற்கத்தக்கத் தொடர்பாடலுக்கு நம்மைத் தூண்டுவதும் இந்த இதயமே. தனது கருத்துகளைத் திணிக்கும் முன்சார்பு எண்ணங்கள் இன்றி, பொறுமையாகக் காத்திருந்து, பிறருக்குச் செவிமடுக்கும்போது தான் அன்பின் அடிப்படையில் உண்மையைப் பேச (எபே 4:15) நம்மால் முடியும். ஒருவேளை நமக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும், உண்மையை எடுத்துரைக்க நாம் தயங்கக்கூடாது. எனினும், இதயத்திலிருந்து எழும்பாததும், அன்பின் அடிப்படையில் இல்லாமலும் உண்மையை உரைத்தல் கூடாது.

திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் கூறியது போன்று, “ஒரு கிறிஸ்தவனின் செயல்பாடுகள் இதயத்தால் பார்த்தல் ஆகும்” (‘இறைவன் அன்பாய் இருக்கிறார்’ என்ற மடல் 25.12.2005 எண் 31), நமது ஆளுமையின் இருத்தல் தன்மையை எடுத்துக் காட்டுவது நம் இதயம். எனவே, இதயத்தின் குரலுக்கு ஒருவர் செவிமடுத்தல் அவசியம். இதனால் கேட்பவர் தாம் யாருக்குச் செவிமடுக்கிறாரோ அவரது உள்ளத்தின் கருத்துகளைப் புரிந்து கொள்ளவும், அடுத்தவரது இதயத்துடிப்பை உணரவும் முடிகிறது. அப்போது இருவரிடையே உண்மையான ‘சந்திப்பு’ என்னும் புதுமை நிகழ்கிறது. இதனால், ஒருவர் மற்றவரை கனிவுடன் நோக்கவும், தமக்கிடையே உள்ள

வேறுபாடுகளையும், குறைகளையும் ஏற்றுக்கொள்ளவும், செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் தீர்ப்பிடுதலால் விளையும் பிளவுகளையும், வேற்றுமைகளையும் களைய முடியும். "ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்" (லூக் 6:44) என்று இயேசு எச்சரிக்கிறார். "நல்லவர் தம் உள்ளமாகிய கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பார். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக்கொடுப்பார். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக் 6:45). இதனால் அன்பின் அடிப்படையில் உண்மையை எடுத்துக்கூற ஒருவரது இதயம் தூய்மையாய் இருக்க வேண்டியது அவசியம். தூய்மையான இதயத்தினால் செவிமடுப்பதாலும், பேசுவதாலும் மட்டுமே, இன்று நாம் வாழும் உலகில் வரும் வலம், வெற்று ஓசையை எழுப்பும் வெளித்தோற்றங்களிலிருந்து உண்மையைக் கண்டறிய முடியும். இது தொடர்பாடல் துறைக்கும் பொருந்தும், இதயத்திலிருந்து அன்பின் அடிப்படையில் உண்மையை எடுத்துரைப்பது என்பது, நாம் வாழும் இவ்வுலகில் காணப்படும் வெறுப்பும், பாராமுகமும் கொண்ட பண்பாட்டிற்கும், உண்மையை மறைத்து, பொய்மையை எடுத்துரைக்கும் நடைமுறைக்கும் பெரும் சவாலாக உள்ளது.

### இதயத்திலிருந்து தொடர்பாடல்

இதயத்திலிருந்து தொடர்பாடல் மேற்கொள்ளும்போது, நாம் வழங்கும் செய்திகளையும் நிகழ்ச்சிகளைக் கேட்போரும். காண்போரும் நம்முடன் தம் வாழ்வையும் தம் மகிழ்ச்சி, நம்பிக்கை, அச்சம், துன்பங்களையும் பகிர்ந்துகொள்ள முன்வருகின்றனர். இவ்வாறு நிகழ்ச்சிகளை வழங்குவோர் தாம் வழங்கும் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் பார்ப்போரை அன்பு செய்கின்றனர். அவர்களது சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்காமல் அதை மதிக்கின்றனர். இவ்வாறே கொல்கொத்தா சோக நிகழ்விற்குப் பிறகு, இயேசுவின் இரண்டு சீடர்கள் எம்மாவுஸ் பாதையில் சென்றபோது அவர்களுடன் வழிப்போக்கராக வந்த இயேசு நடந்து கொள்கிறார். உயிர்த்த இயேசு அவர்களுடன் தம் இதயத்திலிருந்து உரையாடுகிறார். துயரம் நிறைந்த பயணத்தில் சீடர்களின் உணர்வுகளை மதிக்கிறார். தம்மை அவர்கள்மீது திணிக்காமல், தம்மை கனிவுடனும், அன்புடனும் அறிமுகப்படுத்துகிறார். நடந்ததை அவர்கள் புரிந்துகொள்ள, அவர்களது இதயங்களை



அன்புடன் திறக்கின்றார். இதனாலேயே பின்னர் அவர்கள் மகிழ்ச்சியுடன் 'அவர் வழியில் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும் போது, நம் உள்ளம் பற்றி எரியவில்லையா? என்று பேசிக்கொண்டனர் (லூக் 24:32).

இன்றைய உலகில், திருஅவை உள்பட அனைத்து நிலைகளிலும் பிரிவினையும், வேறுபாடுகளும் மலர்ந்துள்ள இவ்வேளையில், 'திறந்த உள்ளத்தோடும், விரித்த கரங்களோடும் பேசுதல்' தொடர்பாடல் துறையில் இருப்பவருக்கு மிகவும் அவசியமானது. நாம் எல்லோருமே உண்மையைத் தேடிக் கண்டுணர்ந்து, அதை அன்பின் அடிப்படையில் பேசுதல் மிகவும் தேவையானது. சிறப்பாக கிறிஸ்தவர்கள் 'தீச்சொல்லிலிருந்து தம் நாவைக் காத்திட' (திபா 34:13) அறிவுறுத்தப்படுகின்றனர். ஏனெனில், மறைநூல் கூறுவதுபோல 'கடவுளைப் போற்றுவதும், அவர் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் ஒரே வாயிலிருந்தே வருகின்றன' (யாக் 34). நம் வாயிலிருந்து தீச்சொல் எதுவும் வரக்கூடாது. மாறாக, கேட்போர் பயனடையும்படி தேவைக்கு ஏற்றவாறு, அருள் வளர்ச்சிக்கு ஏற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்' (எபே 4:29).

நட்புடன் கூடிய உரையாடல் சில வேளைகளில் கடின இதயங்களுக்கிடையேயும் இணைப்பை உருவாக்க முடியும். இலக்கியங்களிலும் இதற்கான எடுத்துக்காட்டுக்களைக் காண்கிறோம். 'நிச்சயதார்த்தம்' (Betrothed) என்னும் இலக்கியத்தில் 21-ஆம் அதிகாரத்தில் மிகவும் குழப்பத்தில் உள்ள பெயர் குறிப்பிடாதவரிடம் லூசியா அன்புடன் பேசி அவர் தன்னிடம் அன்பை வெளிப்படுத்தச் செய்கிறார். இதையே இன்றைய சமுதாயத்திலும் பார்க்கிறோம். பிறரிடம் பரிவு காட்டுவது ஒரு நல்ல பழக்கம் மட்டுமல்ல; கொடிய மனங்களை மாற்றுவதற்கு மருந்தும் அதுவே. இந்த நற்பண்பு இல்லாதபோது, மனிதர்கள் உறவாடுதல் அவர்களது உறவுகளை அழிக்கும் நஞ்சாகவும், உறவுகளை அழிக்கும் போதைப் பொருளாகவும் மாறுகின்றனர். தொடர்பாடல் துறையில் இருப்பவருக்கு இது மிகவும் முக்கியமானது. நமது தொடர்பாடல் மனிதரிடையே வேற்றுமைகளையும், மோதல்களையும் தூண்டிவிடாமல், அவர்களிடையே பிறரை மதிக்கும் அன்புறவை உருவாக்குவது மிகவும் அவசியம்.

## இதயத்திலிருந்து இதயத்திற்குத் தொடர்பாடல்

**'நன்கு பேசுவதற்கு நன்றாக அன்பு செய்தால் போதும்'**

'இதயத்திலிருந்து பேசுதல்' என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றை புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் தருகிறார். இப்புனிதரின் இறப்பின் 400-வது ஆண்டு நினைவாக நான் எழுதிய 'அனைத்தும் அன்பே' (Totum Amoris Est) என்ற திருத்தூது திருமடலில் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். பிரான்சிஸ் சலேசியார் எனப்படும் இவரின் 400-வது ஆண்டு நினைவு என்பதோடு, 2023-ஆம் ஆண்டில் வரும் இன்னொரு நினைவையும் குறிப்பிட விரும்புகிறேன். திருத்தந்தை 11-ஆம் பயஸ் தனது (Rerum Omnium Perturoationem) என்ற மடல் வழியாக இப்புனிதரை கத்தோலிக்க இதழியல் துறையில் பணியாற்றுபவர்களின் பாதுகாவலராக அறிவித்தார். புனித பிரான்சிஸ் சலேசியார் சிறந்த அறிவாளி, எழுத்தாளர், ஆழ்ந்த இறையியலாளர். இவர் ஜெனீவாவின் ஆயராக 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பணியாற்றியவர். கால்வின் என்பவரின் தப்பறைக் கொள்கைகளுக்கு மத்தியில் திரு அவையைத் திறம்பட வழிநடத்தியவர். அவர் தனது கனிவான பண்பு, மனிதாபிமானம், தன்னோடு ஒத்துப்போகாதவர் களிடமும் பொறுமையாக உரையாடல் மேற்கொள்ளும் தன்மை இவற்றால் மக்களிடையே கடவுளின் இரக்கமுள்ள, அன்பின் மிகச்சிறந்த சான்றாகத் திகழ்ந்தார். நாமும் அவருடன் சேர்ந்து பின்வருமாறு கூற முடியும்: 'இன்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும், பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும் (சீராக 6:5).

'ஓர் இதயம் இன்னோர் இதயத்துடன் பேசுதல்' என்னும் அவரது கூற்று, வரலாற்றில் பலருக்குத் தூண்டுதலாக இருந்துள்ளது. புனித ஜான் என்றி நியூமன் என்பவர் இவர் வழி நின்று (Cor ad cor loquitur) என்பதைத் தனது விருதுவாக்காகத் தேர்ந்தெடுத்தார், புனித பிரான்சிஸ் சலேசியாரின் உறுதியான நம்பிக்கை 'நன்கு பேசுவதற்கு, நன்கு அன்பு செய்தால் போதும்' என்பதாகும். இவரின் கருத்துப்படி தொடர்பாடல் என்பது செய்திகளைச் செயற்கையாகக் கூறாமல் அது தொடர்பாளரின் இதயத்தின் பிரதிபலிப்பாகவும், கண்ணுக்குப் புலப்படாத அன்பின் வெளிப்பாடாகவும் அமைதல் அவசியம்.



புனித பிரான்சிஸ் சலேசியாரின் கூற்றுப்படி 'இதயத்திலும், இதயத்தின் மூலமாகவே ஒரு மனிதன் கடவுளை அறியும் செயல்பாடு நிகழ்கிறது' (Totum Amoris Est. 28.12.2022). தனது சிறந்த அன்பினால் புனித பிரான்சிஸ் சலேசியார் காது கேளாதோரும், பேச்சற்றவருமாகிய மார்ட்டின் என்பவரின் சிறந்த நண்பராகத் திகழ்ந்தார். அதனாலேயே இவர் தனது கருத்தை வெளிப்படுத்த இயலாதவர்களின் பாதுகாவலராகக் கருதப்படுகிறார். இந்த 'அன்பு என்னும் அளவுகோலாலேயே தனது போதனைகளிலும், எழுத்துகளிலும் ஜெனீவாவின் இப்புனித ஆயர் 'எதை நாம் தொடர்பாடல் செய்கிறோமோ அதுவாகவே நாம் இருக்கிறோம்' என்ற உன்னதமான கூற்றை நினைவுபடுத்தினார். இக்கூற்று இன்றைய சமூக ஊடகங்களில் நிகழ்வனவற்றிற்கு மாறாக உள்ளது. இன்று சமூக ஊடகங்கள் வழியாக ஒருவர் தாம் உண்மையில் இருப்பதை பிறருடன் பகிர்ந்துகொள்ளாமல், பிறர் தன்னை எப்படிக் காண வேண்டுமென்று நான் நினைக்கிறேனோ, அவ்வாறு பகிர்தல் என்பதே நிகழ்வாக உள்ளது.

புனித பிரான்சிஸ் சலேசியார் தனது கருத்துகள் அடங்கிய ஏடுகளை ஜெனீவா மக்களிடையே பரப்பினார். இதனால், ஜெனீவா மறைமாவட்டத்திலும், அதற்கு வெளியிலும் அவரது இதழியல் புகழ் பரவியது. திருத்தந்தை ஆறாம் பவுல் கூறியது போன்று, அவரது எழுத்துகள் மக்களுக்கு மகிழ்வையும், அறிவுத்திறனையும் தந்ததோடு, விரும்பிப் படிக்கும் இயல்பினையும் கொண்டிருந்தன (Sabaudiae Gemma என்னும் திருமடல், 29.01.1967). மேற்கூறியவை தொடர்பாடலின் செய்திகள், அறிக்கை, நிகழ்ச்சிகளின் இயல்பாக இருத்தல் அவசியம் அன்றோ!

இன்றைய தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் மேற்கூறிய இயல்புகளைக் கொண்டிருத்தல் எவ்வளவு அவசியமானது! ஊடகத் துறையில் பணியாற்றுவோர் அனைவரும் இப்புனிதரின் கனிவுடைமையால் தூண்டப்பட்டு, உண்மையைத் தைரியத்துடனும், சுதந்திரத்துடனும் எடுத்துக்கூறவும், உணர்வுகளைத் தூண்டும் எதிர்மறையான சொல்லாடலைப் பயன்படுத்தும் சோதனையை மேற்கொள்ளவும் முன்வருதல் அவசியம்.

## கூட்டொருங்கியக்கத் திரு அவையில் இதயத்திலிருந்து உரையாடுதல்

'திரு அவையிலும் ஒருவருக்கொருவர் செவிமடுப்பது மிக அவசியம் என்றும். இதுவே பிறருக்கு நாம் அளிக்கவல்ல வாழ்வளிக்கும் கொடை' என்றும் நான் முன்பு கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன் (56 ஆம் உலகத் தொடர்பு நாளுக்கான செய்தி, 24.01.2022). முன்சார்பு எண்ணங்களை விடுத்து, கவனமுடனும் திறந்த மனதுடனும் பிறருக்குச் செவிமடுப்பது நாம் கடவுளின் பாணியில் கனிவுடனும், நெருக்கமாகவும், கரிசனையுடனும் பிறருடன் பேசுவதற்கு வழிவகுக்கிறது.

இதயத்தைத் தொடும் விதத்தில் இன்று திரு அவையில் தொடர்பாடல் செய்வது மிகவும் அவசரமான தேவையாக உள்ளது. இதுவே பல காயங்களுக்கு மருந்தாகவும், நமது சகோதர சகோதரிகளின் பயணத்திற்கு ஒளியாகவும் அமைகிறது. தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் தொடர்பாடல் திரு அவையில் நிகழ வேண்டும் என நான் கனவு காண்கிறேன். இது இனிமையானதாகவும், அதே வேளையில் இறைவாக்குத்தன்மை உடையதாகவும், மூன்றாம் ஆயிரத்தாண்டில் மிகச்சிறந்த நற்செய்தி அறிவிப்புக்கு வழிகாட்டுவதாகவும் அமையும். இந்தத் தொடர்பாடல் நம்மைக் கடவுளோடு நல்லுறவுகொள்ளச் செய்வதோடு, பிறரோடும் சிறப்பாக பல்வேறு தேவைகளில் இருப்போருடனும் கனிவுள்ள உறவுகொள்ளச் செய்ய வேண்டும். இவ்வாறு இத்தொடர்பாடல் தன்னை முன்னிலைப்படுத்தாமல். எல்லாரிடமும் நம்பிக்கையின் ஒளியைத் தூண்டி விடுவதாக அமைய வேண்டும். பிறருக்குச் செவிமடுத்தலில் தாழ்ச்சியும், உரையாடலில் கனிவுள்ள அக்கறையும், அன்பிலிருந்து உண்மையைப் பிரிக்காத நிலையும் ஏற்படும் வண்ணம் தொடர்பாடல் அமைய வேண்டும்.

## அமைதியின் மொழியால் ஆன்மாக்களில் போர்க்குணத்தை அகற்றுதல்

'இனிய நா எலும்பையும் நொறுக்கும்' என்ற நீதிமொழிகள் கூறுகின்றது (நீமொ 25:15). இன்று போர்கள் மலிந்துள்ள



இடங்களிலெல்லாம் அமைதிக் கலாச்சாரத்தை உருவாக்க. இதயத்தால் பேசுதல் மிகவும் அவசியம். இதுவே பகைமையும், வெறுப்பும் உள்ள இடங்களில், உரையாடலும் ஒப்புரவும் உருவாக வழிவகுக்கும். இன்று அகில உலக அளவில் நாடுகளிடையே மோதல்கள் பெருகி வரும் வேளையில், வெறுப்புணர்வைத் தூண்டாத தொடர்பாடல் மிகவும் இன்றியமையாதது. 'எதிரிகளிடம் மதிப்புடன் உரையாடுவதற்குப் பதிலாக, அவர்களை இகழ்ந்து பழித்துரைப்பது மேல்' என்ற இன்றைய கலாச்சாரப் போக்கை முறியடிக்க வேண்டியது அவசியம் ('எல்லாரும் சகோதரர்கள்' என்னும் திருத்தந்தை பிரான்சிசின் மடல், அக்டோபர் 3, 2020, பக்கம் 201).

'அவனியில் அமைதி' என்னும் தன் மடலில் திருத்தந்தை 13 -ஆம் ஜான் குறிப்பிடுவது போன்று' உண்மையான அமைதி ஒருவர் மீது மற்றவர் கொண்டுள்ள நம்பிக்கையின் மீதுதான் கட்டியெழுப்பப்படுகிறது' (எண் 113.). இதன்படி, உரையாடலுக்கும், போர் மனப்பான்மையை முற்றிலும் கைவிடும் மன நிலைக்கும் மக்களைத் தயார்படுத்தும் சமூகத் தொடர்பாளர்கள் இன்றைக்கு மிகவும் தேவைப்படுகிறார்கள். இவர்கள் மக்களிடையே நிலவி வரும் போர்க்குணத்தைத் தகர்த்தெறிய முடியும்.

இன்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடாமல், தைரியமாக பொது நன்மைக்காக உண்மையை வலிமையாக எடுத்துரைக்கும் ஊடகவியலாளர்கள் தேவை. 60-ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் தற்போது போர்கள் பற்றிய அச்சம் உலக மக்களிடையே தோன்றத் தொடங்கியுள்ளது. இது முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும். விரைவாக மாற்றப்பட வேண்டும். இது தொடர்பாடல் துறையிலும் நிகழ வேண்டும். போர்க் கருவிகளைப் போலவே இன்று கீழ்த்தரமான வார்த்தைகள் பகிரப்படுகின்றன. இது மிகவும் ஆபத்தானது, இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். போர் மற்றும் வன்முறையைத் தூண்டும் பேச்சுகள் உடனே நிறுத்தப்பட வேண்டும். தங்களது நலனுக்காக உண்மையைத் திரித்துக் கூறும் பிரச்சாரங்கள் கைவிடப்பட வேண்டும். மாறாக, மக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் களைந்தெறியும் ஆற்றல் உள்ள தொடர்பாடல் வலுப்பெற வேண்டும்.

போர் என்னும் நஞ்சு. மனித இதயத்திலிருந்தே வருவதால், அமைதி என்பதும் மனித இதயத்தின் ஒரு முக்கிய முடிவெடுத்தலால்தான் இயலும் என்பதைக் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருக்கிறோம் (திருத்தந்தை பிரான்சிஸ் 56-ஆம் ஆண்டின் உலக அமைதிக்கான செய்தி, 01.01.2023. இன்று உலகில் நாம் அனுபவிப்பதைவிட மிகச் சிறந்த கலாச்சாரத்தை உருவாக்கவும், பிளவுண்டு கிடக்கும் உலகை ஒன்றுபடுத்தவும் வழிகாட்டுவதற்கான முடிவு மனித இதயத்திலிருந்தே எழும்ப வேண்டும். இதற்காக நாம் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்க வேண்டும். இதற்காக ஊடகத் துறையில் பணியாற்றுவோர் பெரும் பொறுப்புணர்வோடும், தமது ஊடகப் பணிகளை உலகிற்கான அர்ப்பண உணர்வோடும் நிறைவேற்ற அழைக்கப்படுகின்றனர்.

இறைத்தந்தையின் இதயத்திலிருந்து அனுப்பப்பட்ட வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து நமது தொடர் பாடல் பணிகளை நாம் தெளிவாகவும், திறந்த உள்ளத்தோடும் இதயத்திலிருந்து பேசுகின்றவர்களாகவும் ஆற்ற நமக்கு உதவிபுரிவாராக!

வார்த்தை மனிதர் ஆன இயேசு கிறிஸ்து, மக்களின் துடிக்கும் இதயங்களுக்குச் செவிமடுக்கவும், பகைமையையும், பிளவுகளையும் அகற்றி நாம் அனைவரும் சகோதரர்கள், சகோதரிகள் என்பதைக் கண்டுணரவும் உதவிபுரிவாராக!

அன்பும், உண்மையின் வார்த்தையுமான இயேசு கிறிஸ்து நாம் அன்பின் அடிப்படையில் உண்மையைப் பேசவும், ஒருவர் மற்றவர்களுக்குப் பாதுகாவலாகத் திகழவும் உதவுவாராக!



# நற்செய்தி சங்கம்

கொல்லங்கோடு மறைவட்ட நற்செய்தி சங்க உறுப்பினர்களுக்கான வகுப்பு, அக்டோபர் மாதம் 2-ம் தியதி மலங்கரை கத்தோலிக்க நற்செய்தி சங்க இயக்குனர் அருட்தந்தை பெனடிக்ட் OIC அவர்கள் தலைமையில் பின்குளம் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை சஜித் பிரான்ஸிஸ், அருட்தந்தை ராபின்சன் அவர்களின் வகுப்புகள் இடம் பெற்றன. இறுதியில் நற்செய்தி சங்க உறுப்பினர்கள் தங்கள் நற்செய்தி பணியின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# மறைபரப்பு தள செய்திகள்

ஆரோக்கிய அன்னை மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், மதுரை மறைப்பணித்தளத்தின் திருவிழாவானது 09.09.2023 அன்று கொண்டாடப்பட்டது. மாலை 6.30 மணிக்கு மாலை செபமும், தொடர்ந்து ஆடம்பர கூட்டுத் திருப்பலி பேரருட்தந்தை பெனட், அருட்தந்தை சஜித் பிரான்சிஸ், அருட்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட், அருட்தந்தை பிபின்ராஜ், அருட்தந்தை அஜேஷ் ஆகியோர் இணைந்து ஒப்புக் கொடுத்து இறைமக்களுக்கு ஆசீர் வழங்கினர். திருப்பலி முடிந்து சிறு வாழ்த்து கூட்டம் நடைபெற்றது. அதில் முன்னாள் பங்குத் தந்தையர்கள் அருட்தந்தை பெனட் மற்றும் அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் தங்கள் மறைபரப்பு அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டனர். அன்பின் விருந்தோடு விழா நிறைவுற்றது. விழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை ஜோஸ் பாறவிளை அவர்கள் வழிகாட்டுதலில் இறைமக்கள் இணைந்து செய்தனர்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**நவம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **17, 18** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை இராபின்சன்
நவம்பர் 01



அருட்தந்தை சதீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை பென்னட்
நவம்பர் 01



அருட்தந்தை அஜீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை வினு குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஹெபின்
நவம்பர் 01



அருட்தந்தை சஜின்
நவம்பர் 01



அருட்தந்தை சுனீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஜெனிற்றோ
நவம்பர் 01



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**விண்ணைத் தொடுதிட்டம் – வருடாந்திர ஆய்வு கூட்டம்**

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் விண்ணைத்தொடு குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் வருடாந்திர ஆய்வு கூட்டமானது 09.10.2023 முதல் 11.10.2023 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக சமூகப் பணிமையத்தின் மூன்று பணியாளர்கள், CRS நிறுவனத்தின் மூன்று பணியாளர்கள், நான்கு மறைமாவட்ட இயக்குநர்கள், திட்டபணியாளர்கள் என 38 நபர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் ஒரு வருடத்தில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள் குறித்து மறைமாவட்ட வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**தளிர்கள் உலகம் – பயனாளிகள் சந்திப்பு**

மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெற்றுவரும் பயனாளிகளை சந்திப்பதற்காக 14.10.2023 அன்று ஜெர்மெனி நாட்டை சார்ந்த திருமதி. சூசன்னா லிம்பா அவர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்கள் வழியாக கல்வி உதவித்தொகை பெற்றுவரும் 26 மாணவ மாணவிகளையும் அவர்களது பெற்றோர்களையும் தனித்தனியாக நேரில் சந்தித்து உரையாடினார்கள். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் மாணவ மாணவிகளை வாழ்த்தி அவர்களுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்வித்தார்கள். தொடர்ந்து சிறுதொழில் உதவித்தொகை வழங்கப்பட்ட பயனாளிகளின் இல்லங்களையும், சுய உதவி குழுக்களையும், அழகு கலை மற்றும் ஆரி தையல் கலைபயிற்சி பெறும் பெண்களையும் சந்தித்து உரையாடி அவர்களை ஊக்குவித்தார்கள்.

**நலத் திட்டஉதவிகள்**

18.10.2023 அன்று விருட்சம் கடன் உதவிதிட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தில் செயல்பட்டுவரும் 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது. 10.10.2023 அன்று மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் வழியாக கோள்பிங் குடும்பத்தில் உறுப்பினராக இருந்து இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு ரூபாய் 10,000- இறப்பு நிதியாக வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்** : 12.10.2023 முதல் 14.10.2023 வரை கேரள மாநிலம், பாலாவில் வைத்து காரிதாஸ் இந்தியா சார்பாக நடத்தப்பட்ட மறைமாவட்ட சமூகப்பணி இயக்குநர்களின் தேசிய பேரவை கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

உலக மனநல தினத்தை முன்னிட்டு, அக்டோபர் மாதம் 9-ம் தியதி அன்று மார்த்தாண்டம் மறைமாவட்ட HOM நலவாழ்வு பணிமையம் சார்பாக தடிக்காரன்கோணம் அசிசி நிலையத்தில் உள்ள மனநலம் குன்றியோர் இல்லத்தை தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலாளர் அருட்சகோதரி ஜோஸ்பின் மேரி அவர்கள் சந்தித்தார்கள். HOM இயக்குநர் அரு:ட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் ஜெபம் செய்து துவக்கவுரையாற்றினார்கள். பின்னர் அருட்சகோதரி ஜோஸ்பின் மேரி அவர்கள் அங்கு தங்கியுள்ள மனநலம் பாதித்த மகளிருடன் உரையாடி, உடல், மன நல பாதிப்பின் காரணங்களை குறித்து எடுத்துரைத்தார்கள். மேலும் அவர்களை மகிழ்விக்கும் வகையில் பாடல்களை பாடி, மனநலம் பாதித்தவர்களையும் அதில் பங்கேற்கச் செய்து, அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்வடையச் செய்தார்கள்.

பின்னர் ஒரு சில மகளிருக்கு இரத்த அழுத்த பரிசோதனை செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார், அலுவலக கண்காணிப்பாளர் அருட்சகோதரி ஐஸ்வரியா, HOM செவிலியர்கள் திருமதி ஆஷா, திருமதி ஷீபா மற்றும் அலுவலக பணியாளர் லிஸ்பின் ஆகியோர் செய்தனர். இச்சந்திப்பிற்கான ஒழுங்குகளை இல்ல நிர்வாகி அருட்சகோதரி கார்மல் மற்றும் இதர அருட்சகோதரிகள் செய்தனர். HOM சார்பாக மனநலம் பாதித்தோர் இல்லத்திற்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது.

மார்த்ததாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு பணி மையமான HOM நிறுவனத்திற்கு ஜெர்மன் நாட்டில் Indienhilfe என்ற அமைப்பின் தலைவர் Susanne Limbach அவர்கள் அக்டோபர் 11 மற்றும் 12 ஆகிய தியதிகளில் வருகை தந்தார்கள். முதல் நாள் நிகழ்வில், HOM நிறுவன இயக்குநர் மற்றும் HOM பணியாளர்கள் சார்பாக HOM சிறப்பு பள்ளி குழந்தைகளால் வரவேற்பு அளிக்கப்பட்டது. HOM இயக்குநர் தந்தை அலுவலக பணியாளர்கள், சிறப்பு குழந்தைகளுடன் உரையாடல் திருமதி சூசன்னா லிம்பா அவர்களால் நடத்தப்பட்டது. இந்நிகழ்விற்குப் பின்னர், படுக்கை



நோயாளிகளுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது. மதிய உணவிற்குப் பின்னர் HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் குழு அமைப்பாளர்களுடனான சந்திப்பும், நடைபெற்றது. மேலும் படுக்கை நோயாளிகள் பராமரிப்பு செவிலியர்களுடன் சந்திப்பு அருட்சகோதரி ஐஸ்வரியா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன் பின்னர் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுடனான சந்திப்பும் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வாக, HOM பணித்தளங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றார்கள். மார்த்தாண்டம் அலகின் சுயஉதவிக் குழுக்களின் நிர்வாகிகளின் கூட்டத்தில், பங்கேற்று அவர்களுடன் உரையாடினார்கள். பின்னர் குலசேகரம் பகுதியல் HOM வழியாக Indienhilfe உதவியுடன் வழங்கப்பட்ட Solar Light பயனாளியின் வீடு மற்றும் கல்வி உதவி கிடைத்த பயனாளியையும் சந்தித்தார்கள். அதன் பின்னர் தேனிகுளம் பகுதியில் HOM வழியான ஆடுகள் வழங்கப்பட்ட பயனாளியின் வீடு மற்றும் கல்வி உதவி கடைத்த பயனாளியையும் சந்தித்தார்கள். மதிய உணவிற்றுப் பின், இறச்சகுளத்தைச் சார்ந்த Solar Light கிடைத்த பயனாளியை சந்தித்தார்கள். இறுதியாக இறச்சகுளம் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்ற கூடுகையில், HOM அனைத்து பணியாளர்களுடன் பற்கேற்றார்கள். Susanne Limbach அவர்களின் வருகை மிகச் சிறப்பானதாக அமைந்தது.

1) HOM அனைத்து பணியாளர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 07.9..2023 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் ஒவ்வொருவரின் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். பின்னர் HOM மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. குழுக்களின் நிதி ஆதாரத்திற்கான செயல்திட்டத்தின்படி குலுக்கல் பரிசுச் சீட்டு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மேலும் படுக்கை நோயாளிகளை பராமரிக்கும் பணிக்கு சேவைக் கட்டணம் நிர்ணயிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

2) HOM சுயஉதவிக் குழுக்களை மேம்படுத்தும் பொருட்டு, வங்கிக் கடன் பெற்று, நிறுவன உதவியுடன் சுய உதவிக்குழுக்களுக்கு சிறுதொழில்

கடன் வழங்க தீர்மானிக்கப்பட்டது. இதற்கான முதல் முயற்சியாக அமைப்பாளர்கள் மற்றும் HOM பணியாளர்கள் குழுக்களின் பொறுப்பாளர்களை சந்தித்து புதிய குழுக்கள் உருவாக்குவதற்குரிய பணியை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் குழுக்களில் செயல்பட்டு வரும் தலைவர் பொருளர் மற்றும் செயலர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி 25.09.2023 அன்று கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

3) HOM குழுக்களை மேம்படுத்தவும், புதிய குழுக்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளை கண்டறிந்து அதற்கேற்ப செயல்படுவதற்கான வழிகாட்டு பயிற்சியானது 25.09.2023 அன்று கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியை MIDS இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், MIDS திட்ட ஒருங்கிணைப்பாளர் பேட்றிக் மற்றும் தேவராஜ் ஆகியோர் அளித்தனர். இப்பயிற்சியில் 110 சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு ஆயர்பேரவையின் நலவாழ்வு பணிக்குழு சார்பாக பூண்டியில் வைத்து நடைபெற்ற முழுமையான ஆரோக்கியம் குறித்து 21.9.2023 மற்றும் 22.9.2023 ஆகிய தியதிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் HOM சார்பாக திரு. லிஸ்பின், அருட்சகோதரி ஐஸ்வரியா, HOM செவிலியர்கள் திருமதி ஆஷா மற்றும் ஷீபா ஆகியோர் பங்கேற்றனர்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட HOM நலவாழ்வு பணி மையம் மற்றும் திருவனந்தபுரம் IBCR குழுமம் சார்பாக செவிலியர்களுக்கான இலவச ஜெர்மன் மொழி பயிற்சி குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு HOM வளாகத்தில் வைத்து 2.10.2023 அன்று நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றி துவக்கி வைத்தார்கள். அருட்தந்தை அஜீஷ்குமார் வரவேற்புரையாற்றினார். ஜெர்மனி நாட்டைச் சார்ந்த திரு. மார்கஸ் மற்றும் ஜீடித் ஆகியோர் ஜெர்மன் மொழியின் முக்கியத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு குறித்து செவிலியர்களுக்கு பயிற்சியளித்தார்கள். இதற்கான ஏற்பாடுகளை HOM மற்றும் IBCR குழும பணியாளர்கள் செய்தனர்.





மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்க தின விழா கொண்டாட்டம் குலசேகரம் மறைவட்டத்தில் அக்டோபர் மாதம் 15 தியதி மதியம் 2 மணி அளவில் ஆரம்பமானது. “ஒருங்கிணைந்த வளர்ச்சியில் இளையோர்களின் பங்கு” என்ற மைய சிந்தனை "KANAFIM" 2K23 என்னும் தலைப்பில் நடைபெற்றது. அனைத்து மறைவட்டங்களில் இருந்தும் இளையோர்கள் பங்கெடுத்தனர். விழாவில் மார்த்தாண்டம் மறை மாவட்ட ஆயர் மேதகு வின்சன்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர் மலங்கரை திருஅவையின் இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை டாக்டர் பிரபீஷ் ஜார்ஜ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். மேலும் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அடிகளார் குலசேகரம் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அடிகளார் குலசேகரம் மறைவட்ட இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை சுரேஷ் ஆண்டனி ஏனைய மறைவட்ட இயக்குநர்கள், அருள்சகோதரி ஊக்குனர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இளையோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அனைத்து மறைவட்டங்கள் சார்பாக விழிப்புணர்வு நடனங்கள் மற்றும் குறு நாடகங்கள் மூலம் தங்கள் கலை திறனை இளையோர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்நிகழ்வுகள் அனைத்தும் மறைமாவட்ட MCYM இயக்குனர் அருள்தந்தை ஜோணி ஆல்பிரட் அடிகளார் அவர்களின் வழி நடத்துதலிலும் அருள்சகோதரி ஊக்குநர், Sr. ஃப்ளவர் ஜாண் அவர்களின் உடன் வழிநடத்துதலிலும் மறைமாவட்ட MCYM செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் குலசேகரம் மறைவட்ட இளையோர்கள் இணைந்து நிகழ்வுகளை ஒழுங்குப்படுத்தினார்.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

## ஜெபமாலை பவனி

அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதம் என்பதை நாம் நன்கு அறிவோம். ஜெபமாலை பக்தியை வளர்க்கும் வகையில் மரியாயின் சேனை சார்பாக நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான ஜெபமாலை பவனியானது 22.10.2023 அன்று பிற்பகல் 2.15 மணி அளவில் அடைக்காகுழி புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்திலிருந்து சேனை துவக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை Dr. வற்கீஸ் நடுதல அவர்கள் துவக்க உரை வழங்கி ஜெபமாலை பவனியை துவங்கி வைத்தார்கள். ஜெபமாலை ஜெபித்து கொண்டே ஜெபமாலை பவனியானது அம்பிளிகோணம் புனித தோமையார் ஆலயத்தை வந்தடைந்தது. பரிசுத்த தேவ மாதாவின் புகழ்மாலையை தொடர்ந்து நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். நற்கருணை ஆசீர் மற்றும் சேனை இறுதி ஜெபத்துடன் ஜெபமாலை பவனியானது நிறைவடைந்தது. இத்திருப்பவனியில் மோண் ஜோஸ் பிறைட், கோர்எப்பிஸ்கோப்பா S. வற்கீஸ், கொமித்சிய ஆன்ம இயக்குநர் பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத், ஏராளமான அருட்தந்தையர்கள், அருள்கன்னியர்கள் மற்றும் இறைமக்களும் கலந்துகொண்டனர். ஜெபமாலை பவனியை அருட்தந்தை ஜெஸ்றின் நுள்ளிகாடு மற்றும் அருட்தந்தை ஸ்டீபன் பாறவிளை ஆகியோர் ஒழுங்குப்படுத்தினர்.

## 2023-'24 கான பங்கு பேரவை ஒப்புதல் பெற்ற பங்கின் பெயர்கள் (புதிதாக ஒப்புதல் பெற்ற)

| | |
|---|---|
| 48. காஞ்சியோடு | 50. ஆளூர் |



# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகையானது 30-10-2023 அன்று அணக்கரை பங்குதந்தை இல்லத்தில் வைத்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முக்கிய கருத்துக்களாக மறைவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழுகூட்டம் நவம்பர் மாதம் 19-ம் தியதி நடத்த வேண்டும் என்றும், குலசேகரம் மறைவட்டத்தில் இறைப்பணி செய்யும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கிறிஸ்துபிறப்பு கூடுகை டிசம்பர் மாதம் 8-ம் தேதி நடத்த வேண்டுமென்றும், குலசேகரம் மறைவட்ட தின விழாவானது 2024 ஜனவரி மாதம் அணக்கரை பங்கில் வைத்து நடத்த வேண்டும் என்றும் தீர்மனிக்கப்பட்டது.

இக்கூடுகையில் குலசேகரம் மறைவட்டத்திலுள்ள எல்லா அருட்தந்தையர்களும் பங்கெடுத்து தங்கள் பங்குபணி அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். இறுதி ஜெபத்துடன் இக்கூடுகை நிறைவுற்றது.

## பேராலயக் கட்டுமானபணிக்கு ஆலயங்கள் வழங்கிய நன்கொடை (2022)

| S.No. | Parish | Amount | S.No. | Parish | Amount |
|---|---|---|---|---|---|
| 1. | Konam | 4,400 | 4. | Kannacode | 8,100 |
| 2. | Unnamalaikadai | 16,015 | 5. | Kuzhithurai | 14,000 |
| 3. | Valiyavilai | 15,600 | 6. | Pachippari | 6,150 |

# ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள்



1 ➢ சூரியகோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

1 ➢ புஷ்பகிரி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கினார்.

2 ➢ மார் எப்ரேம் வளாகத்தில் நடைபெற்ற செவிலியர்களுக்கான பயிற்சி முகாமில் சிறப்புரையாற்றினார்.

2 ➢ குழித்துறை மறைமாவட்டத்தில் IELTS பயிற்சி வகுப்பை துவங்கி வைத்தார்.

2 ➢ அழகியமண்டபத்தில் கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பாக நடைபெற்ற போதை ஒழிப்பு பேரணிக்கு தலைமைத் தாங்கினார்.



4 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் அருட்சகோதரிகளின் ஆண்டிறுதி தியானத்தை முன்னிட்டு மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

5 ➢ திருச்சி மறைமாவட்டத்தில் பழைய பாலக்கரை ஜெபமாலை ஆலயத்தின் 275 ஆண்டு விழாவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றினார்.

8 ➢ பெருவழிக்கடவு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

13 ➢ பாளை மறைமாவட்ட குருக்களுக்கு ஆண்டிறுதி தியானத்தை வழிநடத்தினார்.

14 ➢ காஞ்சிரகோடு ஆலயத்தில் மாலை ஆராதனையை முன்னின்று வழிநடத்தி மறையுரையாற்றினார்.

15 ➢ குலசேகரம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

15 ➢ அணக்கரை ஆலயத்தில் நடைபெற்ற மறைமாவட்ட இளையோர் இயக்க கொண்டாட்ட நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

16 ➢ முளகுமூடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற Marthandam People Development Nithi Ltd கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

20 ➢ மார்த்தாண்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ராம்ராஜ் துணிக்கடையை திறந்து வைத்தார்.

20 ➢ மார் எப்ரேம் பெறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

21 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் நடைபெற்ற Kolping கொண்டாட்ட நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றி தொடர்ந்து நடைபெற்ற பொதுகூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு ஞானதாசபுரம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

22 ➢ மரியாயின் சேனை சார்பாக நடைபெற்ற ஜெபமாலை பவனியில் மறையுரையாற்றினார்.

27 ➢ மார்த்தாண்டத்தில் CSB வங்கியின் புது கிளையை துவங்கி வைத்தார்.

28 ➢ குழித்துறை மறைமாவட்ட மரியாயின் சேனை இயக்கத்தின் கூடுகையில் மறையுரையாற்றினார்.

29 ➢ ஆதிச்சவிளாகம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

29 ➢ நாகர்கோவில் மறைவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழு கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

30 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல (pneumatology and grace); பற்றி வகுப்பு எடுத்தார்.





## இம்மாதம் நினைவு கூர

நவம்பர் 2023

1 – அனைத்து புனிதர்கள்
3 – பவுலோஸ் மார் பீலக்ஸினோஸ் ஆண்டகையின் நினைவு
நிசியா நகரத்து 318 தந்தையர்கள்
4 – ஸூபோறோ (மங்கள வாழ்த்துக்காலம்)
5 – கூதோஸ் ஈத்தோ ஞாயிறு (சபையின் புனிதமாக்கம்)
திருவழிபாட்டு ஆண்டு தொடக்கம்
பாசுரமாலையின் சுபஹோ ஒன்றாம் கோலோ இன்று ஆரம்பமாகும்
7 – மிலித்தீன் நகரத்து 33 இரத்தசாட்சிகள்
8 – அனைத்து தூதர்கள்
9 – புனித தெயதோர்
10 – இறைவாக்கினர் சாமுவேல், திருத்தந்தை புனித லியோ
12 – ஹூதோஸ் ஈத்தோ ஞாயிறு
அலெக்ஸாந்திரியாவின் மார் யோவான்
13 – புனித தங்கநாவு யோவான் யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் பெயர்விழா
14 – திருத்தூதர் பிலிப்பு
15 – புனித ஆல்பர்ட்
16 – திருத்தூதர் மத்தேயு
19 – சக்கரியாவுடனான அறிவிப்பு
21 – தூய இறையன்னையின் தேவாலய நுழைவு
22 – மார் பிலமோன், புனித சிசிலியா
23 – திருத்தந்தை புனித க்ளெமண்ட், புனித பெலிஸிற்றா
புனே கட்கி தூய எப்ரேம் மறைமாவட்ட உதயம்
26 – தூய இறையன்னைக்கு அறிவிப்பு
கிறிஸ்து அரசர் திருநாள் (லத்தீன் முறை)
28 – புனித கத்தரீனா
29 – சாறூகியரான மார் யாக்கோபு
30 – திருத்தூதர் அந்திரேயா

10

10

26

30


# மறைமாவட்ட MCYM தினவிழா கொண்டாட்டங்கள்










## MIDS








# மறைபரப்புத்தளம்





## நற்செய்தி சங்கம்





## Legion of Mary






## HOM







